[12th December 1961

Thefts (Arani Bazaar)

* 2254 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், ஆரணி பஜாரில் திருடு போனதை யொட்டி 8—6—1961, 25—9—1961-ல் கொடுக்கப்பட்ட புகார்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : According to the Superintendent of Police, North Arcot, the first complaint of theft was made before the Sub-Inspector of Police, Arni Town Police Station, on 9th June 1961 and not on 8th June 1961 as stated by the hon. Member. The two complaints preferred before the Sub-Inspector of Police, Arni Police Station, on 9th June 1961 and 25th September 1961 were investigated and referred as complaints of civil nature and non-cognizable as no criminal case had been made out.

SRI S. M. ANNAMALAI : இந்தப் புகாரை லோகல் போலீஸ் சரிவர விசாரிக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. லோகல் போலீஸ் சாதகமாக இருப்பதின் காரணமாக பட்டப் பகலில் பூட்டை உடைத்து உள்ளே இருக்கிற பொருள்களை எடுத்துச் சென்றதாக அந்தப் புகாரில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் புகாரை டி.எஸ்.பி-ஐக் கொண்டு புலன் விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு ஒன்றும் அவசியம் இல்லை. அம்மாதிரி புகார்களுக்கு ஆதாரம் இல்லை. பஞ்சாயத்துதாரர்கள் முன்னிலையில் நடந்தது. இது திருடு அல்ல. ஏதோ அவர்களுடைய சொந்த விவகாரங்கள், அதனால் தங்கள் உரிமையைக் கொண்டாடி அதைக் கைப்பற்றினார்கள் என்று தான் ஏற்பட்டது. ஆகையினால், போலீஸ் கிரிமினல் வழக்கு தொடருவதற்கு இதிலே இடம் இல்லை.

Community Development Scheme

* 2255 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமுதாய அபிவிருத்தி திட்டத்தைப்பற்றி மைசூரிலும், பவானிசாகரிலும் இதுவரை எவ்வளவு பேர்களுக்கு (1) புத்தொழிப் பயிற்சியும் (2) ஆய்வு முறை பயிற்சியும் கொடுக்கப்பட்டது ?

(இ) அதில் அதிகார பற்றற்றவர்கள் எத்தனை பேர்கள் ? பற்றில்லாதவர்கள் எத்தனை பேர்கள் ?

(உ) பயிற்சி ஆங்கிலத்திலா, தமிழிலா ?

(எ) பயிற்சி கொடுக்கப்படுவதன் நோக்கமென்ன ?

[12th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (எ) Particulars relating to the training given to both officials and non-officials in the Orientation and Study Centres at Mysore and Bhavanisagar were called for from the Principals of the respective centres. The reply from the Principal, Orientation and Study Centre, Mysore, is awaited. A statement [a] relating to the training given in the Orientation and study Centre, Bhavanisagar, is placed on the table of the House. The particulars relating to the Orientation and Study Centre, Mysore, will be placed on the table of the House as soon as it is received from the Principal of that Centre.

SRI V. K. KOTHANDARAMAN : சமுதாய அபிவிருத்தித் திட்டம் பரிபூரணமான உற்சாகத்துடன் நிறைவேறவேண்டும் என்பதற்காக வேண்டித்தான் இதுபோன்ற புத்தொழிப் பயிற்சியும், ஆய்வு முறை பயிற்சியும் கொடுக்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் அதிகாரிகளைத் தவிர, அதிகாரப் பற்றற்றவர்களும் இருப்பதால், அவர்களில் பலபேர்களுக்கு ஆங்கிலம் தெரியாமல் இருக்கிறார்கள். அப்போர்ப்பட்டவர்களுக்கு அங்கே ஆங்கிலத்தில் பயிற்சி கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் எப்படி அதைப் புரிந்துகொண்டு மேலும் உற்சாகத்துடன் நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்ற முடியும்? மத்திய சர்க்கார் திட்டம் என்று சொல்லலாம். ஆனால் அந்தத் திட்டம் இந்த ராஜ்யத்தில் நடக்கக்கூடிய காரணத்தினால், இனிமேலாவது தமிழிலே பயிற்சி கொடுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு தமிழிலே சொல்லித்தான் இருப்பார்களே ஒழிய, ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு வெறும் ஆங்கிலத்தில் சொல்லி இருக்க மாட்டார்கள்.

Chemical fertilizers

* 2256 *Q.*—SRI K. R. NALLASIVAM (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாம்பல் சத்துள்ள ரசாயன உரம் நம் ராஜ்யத்துக்கு எவ்வளவு தேவை?

(இ) 1959-60, 1960-61-ம் ஆண்டுகளில் எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டது?

(உ) இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளை அரசாங்கம் பரிசிலனை செய்ததா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The following is the requirement of Potash for our State :—

During 1959–60—11,000 tons.
During 1960–61—12,250 tons.

(இ) The following is the quantity (of Muriate of Potash) imported into our State :—

During 1959–60—19,924.3 tons.
During 1960–61— 6,418.7 tons.